31-01-2013 **அன்று நடந்த உரையாடலின் பொழிப்பு**

**தலைப்பு : அழகியல்**

**தொடக்கவுரையாடல் : திரு. ராஜரட்ணம்**

**அறிமுகம்**

அழகியல் குறித்த தேடல்கள் இன்று சகல மட்டங்களிலும் முனைப்படைந்துள்ளது. அழகியல் குறித்த தேடலும் நுகர்வும் மதிப்பீடும் மக்கள் மத்தியில் விருப்பத்துக்குரியதாகவும், கவர்ச்சிக்குரியதாகவும், உணர்வுகளின் வடிகாலாகவும், திருப்தியளிப்பதாகவும் உள்ளது.

மனிதர்களின் வாழ்வில் தனிமனித, சமூக அசைவியக்கங்கள் ஒவ்வொன்றிலும் அழகியற்கூறுகளை கண்டுகொள்ளமுடியும். மேலைத்தேய கீழைத்தேய கலை இலக்கிய, மெய்யியல் மரபுகளில் அழகியலின் தோற்றம். அதன் வரையறைகள், கலை அழகியல் கோட்பாடுகள், அழகியலும் மொழியும், அழகியல் மதிப்பீடுகள், அழகியல் பிரச்சினைகளும் விமர்சனங்களும் போன்ற பல விடயங்கள் குறித்து நாம் கலந்துரையாடலாம்.

**அழகியல் குறித்து எழுப்பப்படும் வினாக்கள்.**

அழகு, கலை என்றால் என்ன?
அழகு என்பது காண்போரின் கண்ணில் உள்ளதா அல்லது பொருளில் உள்ளதா?
காண்போரிடம் உள்ள எவ்வம்சம் அழகை உணரச் செய்கிறது?
பொருட்களின் ஒழுங்கமைப்புக்கும் அழகுணர்வை ஏற்படுத்தும் நிலைகளுக்கும் தொடர்புகள் எவை? அதாவது அறிவியலாளன் ஒரு விஞ்ஞானியைப் போல அழகின் கூறுகளை ஆய்வு செய்ய முடியுமா?

**அழகியல் என்ற சொல்லின் பாவனை**

அழகு கலை குறித்த உரையாடல்கள் மேலைத்தேயத்தில் கிரேக்கர் காலத்திலிருந்தே ஆரம்பித்துள்ளது. அழகு என்றால் என்ன என்று சோக்கிரடீஸ் வினவிய வினாவுக்கு திருப்திகரமான பதில் கிடைக்கவில்லை. இன்றும் இது குறித்து தேடல்கள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன.

> அழகுபற்றிய ஆய்வுகளில் உயிர் இரசாயனவியலாளர்களின் பங்கு பெருமளவில் தேவைப்படுகிறது. "அழகு" என்பதை எமது உடல் ஏற்றுக்கொள்ளுவதற்கு எத்தகைய உயிர் இரசாயன மாறுதல்கள் மூளையிலும் உடலிலிலும் நடைபெறவேண்டியிருக்கிறது என்பதனைத் துல்லியமாகக் கண்டறிவதன் மூலம் அழகு பற்றிய முடிச்சுக்களை அவிழ்க்க முடியும்.

18ஆம் நூற்றாண்டு வரை AESTHETICS என்ற பதம் கலை மெய்யியலாளர்களின் சொல்லாடல்களில் இடம்பெறவில்லை.

**அழகியலுக்கான வரையறை**

'அழகு பார்க்கப்படும் பொருளில் உள்ளது.' 'அழகு அதனைச் சுவைப்பவரின் கண்களில் உள்ளது அல்லது மனதில் உள்ளது.' என்ற கூற்றுக்கள் அழகு பற்றி மனிதர்கள் வெவ்வேறு அர்த்தத்தில் பொருள் கொள்கிறார்கள் என்பதைக் காட்டுகின்றது.

கலை பற்றிய உரையாடல்களில் 'அழகு' என்ற சொல் என்ன அர்த்ததில் பயன்படுத்தப்படுகிறது என்பதை அறிவதன் மூலம் 'அழகியல் அனுபவம்' அழகியல் தீர்ப்புக்கள் பற்றி அறிவதற்கு தற்கால அழகியலாளர்கள் முயன்ற போதும் அழகியலுக்கான ஒரு பொது வரையறையை அவர்களால் தரமுடியாதுள்ளது.

கலை அல்லது அழகியல் என்பது பல நூற்றாண்டுகளாக 'போலச் செய்தல்' முறைகளில் ஒன்றாகவே விளக்கப்பட்டுவந்துள்ளது. உதாரணமாக மனிதனின் ஊடாட்டமே நாடகம் என்ற போலச் செய்தலாக சித்தரிக்கப்பட்டது.


**மிகுதி அடுத்த பக்கம்**

**அடுத்து வரும் தலைப்புக்கள்**

**தமிழக அரசியலின் சமகாலப் போக்குகளும் இலங்கை அரசியல் மீதான தாக்கங்களும்**
க. ஆதித்தன் | 07-02-2013

**காதல் ♥**
திறந்த கலந்துரையாடல் | 14-02-2013

R2P (Right to protect)
தெ. ஞா. மீநிலங்கோ | 21-02-2013



தேவநேயப் பாவாணர்

*தேவநேயப் பாவாணர் ( Devaneya Pavanar ) (பெப்ரவரி 7, 1902- சனவரி 15, 1981)* மிகச்சிறந்த தமிழறிஞரும், சொல்லாராய்ச்சி வல்லுநருமாவார். இவர் 40க்கும் மேலான மொழிகளின் சொல்லியல்புகளைக் கற்றுச் சொல்லாராய்ச்சிகள் செய்துள்ளார். மறைமலை அடிகளார் வழியில் நின்று தனித்தமிழ் இயக்கத்திற்கு பெரும் பங்களிப்பினை வழங்கியுள்ளார்.

தமிழ் உலக மொழிகளில் மூத்ததும் மிகத்தொன்மையான காலத்திலேயே செம்மையான மொழியாக வடிவம் பெற்றது எனவும்; திராவிடத்திற்குத் தாயாகவும் ஆரியத்திற்கு மூலமாகவும் விளங்கிய மொழியாகவும் இருந்ததென்பது இவரது கருத்தாகும். . கிரேக்கம், இலத்தீன், சமற்கிருதம் உள்ளிட்டவைகளுக்குத் தன் சொற்கள் பலவற்றை அளித்தது என்று இவர் வாதிட்டார். தமிழின் வேர்ச்சொல் வளத்தையும் செழுமையையும் சுட்டிக்காட்டி, அதன் வளர்ச்சிக்கான வழியையும் அவரின் நூல்களின் வழி உலகிற்கு எடுத்து இயம்பினார்.

**சமூக விஞ்ஞான கற்கை வட்டம்**

சமகால அரசியலிலும் சமூக வாழ்விலும் தொழிநுட்பத்திலும் நிகழும் முக்கிய நடப்புக்களை ஆழமாகக் கற்றறிந்துகொள்ளுமுகமாக வாரம் தோறும் வியாழக்கிழமைகளில் பிற்பகல் 6:00 மணிக்கு சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம் கூடுகிறது.

அரசியல், தொழிநுட்பம், சமூகம் எனப் பல்வேறு பரப்புக்களில் தெரிவு செய்யப்படும் தலைப்புக்களில் ஒவ்வொரு வாரமும் ஆழமான திறந்த கலந்துரையாடல் இடம்பெறும்.

நாம் வாழும் இந்தச் சமூகத்தைக் கற்றறிந்து புரிந்துகொள்ளவும் அப்புரிதலிலிருந்து இச்சமூகத்தை வளர்த்தெடுக்கவும் உங்கள் அனைவரையும் சமூக விஞ்ஞான கற்கை வட்டம் அழைக்கிறது.

சமூக விஞ்ஞான கற்கை வட்டம்
தேசிய கலை இலக்கியப் பேரவை,
121 , ஹம்டன் லேன்,
வெள்ளவத்தை.

0772260165
0752151580

FB group : facebook.com/groups/ssscircle/

வலைத்தளம் : circle.thulaa.net

வலைப்பதிவு : circlelk.blogspot.com

**அழகியல்**

முன்பக்கத் தொடர்ச்சி..

சிக்மன்ட் ப்ராயட்டும் அவருக்குப் பின்வந்தவர்களும் கலையாக்கச் செயற்பாடுகளில் கலைஞர்களது ஆளுமையே முக்கியம் பெறுகின்றது எனக் கூறியுள்ளனர். கலைஞனது உளவெளிப்பாடே கவிதை ஓவியம் போன்ற படைப்புக்கள்.

சுவைஞரைத் தம்பால் ஈர்க்கும் வல்லமை கலைகளுக்கு உண்டா?கலைகளின் அழகியல் அம்சமே நுகர்வோனின் கவர்ச்சிக்குக் காரணமாகும் என் சிலர் கூறுகின்றனர். இவர்கள் கலையின் தரம் அவற்றின் அழகியல் அம்சத்தோடு தொடர்புடையது எனக் கூறுகின்றனர். உருவச் சிதைப்பான நவீன ஓவியங்கள் யாப்பிலக்கணத்தை மீறிய கவிதைகள் சப்பென்ற இசைக் கச்சேரிகள் என்பனவற்றில் கலைநியமங்களினால் தரம் தீர்மானிக்கப்படுவதில்லை. எனவே கலைப்பொருள் எதனால் அழகாகிறது என யாரும் எதையும் தெளிவாகக் கூறமுடியாது.

**கலை மொழி**

கலையை ஒரு மொழியாகக் கருதும் ஒருபோக்கு தற்காலத்தில் காணப்படுகிறது. கலைப் பொருளை விளங்குவதற்கும் விமர்சிப்பதற்கும் கலை மொழியில் ஒருவர் பயிற்சி பெறவேண்டும். இசை நடனம் என்பனவற்றில் ரசனைக்கு அக்கலைகளின் மொழியில் பரிச்சயம் தேவை. பரத நாட்டியம் நவீன ஓவியம் நவீன நாடகங்கள் போன்றவற்றை விளங்கக் குறியீடுகள் அவசியம். இலக்கியங்களில் மொழி பிரதான இடத்தைப் பெறுகின்றது.

**உரையாடலின் போது அழகு, அழகியல் பற்றிய பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.**

அழகுபற்றிய ஆய்வுகளில் உயிர் இரசாயனவியலாளர்களின் பங்கு பெருமளவில் தேவைப்படுகிறது. "அழகு" என்பதை எமது உடல் ஏற்றுக்கொள்ளுவதற்கு எத்தகைய உயிர் இரசாயன மாறுதல்கள் மூளையிலும் உடலிலிலும் நடைபெறவேண்டியிருக்கிறது என்பதனைத் துல்லியமாகக் கண்டறிவதன் மூலம் அழகு பற்றிய முடிச்சுக்களை அவிழ்க்க முடியும். ஆளுக்காள் இம்மாறுதல்கள் எவ்வாறு வேறுபடுகின்றது என்பதையும், மனிதர்கள் வாழும் சூழல், கற்றுக்கொள்ளும் விடயங்கள் இதில் எவ்வாறு தாக்கம் செலுத்துகிறது என்பதையும் ஆய்வு செய்யவேண்டியிருக்கிறது.

அழகுணர்வு, அழகியல் இரசனை என்பவை மனிதர்கள் வாழும் சூழல், வாய்ப்புக்கள் போன்றவற்றால் மாறுபடுவது கண்கூடு. இதனைவிட இதுதான் அழகு, இதுதான் கலை என்று மனிதர்களைக் கற்பிக்கவும் முடியும். வெளிர் தோல் அழகானது என்று தோல் வெளிற்றும் இரசாயனங்களுக்கான விளம்பரங்கள் வழியாகத் தொடர்ச்சியாகப் பிரசாரம் செய்யப்பட்டு மக்கள் நம்பவைக்கப்படுவது இதற்கு நல்லதோர் எடுத்துக்காட்டாகும்.

**தமிழக அரசியலின் சமகாலப் போக்குகளும் இலங்கை அரசியல் மீதான தாக்கங்களும்.**
**(இந்த வாரம் கலந்துரையாடப்படவுள்ள விடயப்பரப்பு)**


1. தமிழகத்தின் சமூக அடிப்படை.
2. திராவிட அரசியல்
3. திராவிட அரசியல்மீதான விமர்சனமும் தமிழ்த் தேசிய அரசியலின் போக்கும்.
4. தமிழகத்தின் பொருளாதார அடிப்படையும் பிராந்தியத்தில் தமிழகத்தின் முக்கியத்துவமும்.
5. சாதிய அரசியல்.
6. இலங்கை அரசியல் மீதான தாக்கங்கள்.

"பெண்கள் கிரிக்கெட் விளையாடுவது தான் பெண்கள் சமத்துவத்துக்கு வழியெனச் சொல்ல வரவில்லை, ஆனால் ஒரு காலத்தில் பெண்கள் ஒதுக்கி வைக்கப்பட்ட துறைகளிலெல்லாம் மிளிருவது அழகு.

நான் பார்க்கும் போட்டிகளெல்லாம் திறமைகளை வெளிப்படுத்தும் போட்டிகளாகவே அமைந்திருக்கின்றன.
இன்றும் இலங்கை அணி சிறந்த ஆரம்பத்தின் பின்னர் மத்திய ஓவர்களில் தடுமாறிய போது அணித்தலைவியின் ஆட்டம், ரசங்கிக்காவின் ஆட்டம், அதன் பின்னர் இஷானி கௌஷல்யாவின் ஆட்டம் ஆகியன வெறுமனே ஆரம்ப கட்டக் கிரிக்கெட் அல்ல.
மூவரும் அதியுச்ச கிரிக்கெட் திறனை வெளிப்படுத்தியிருந்தார்கள்.

ஆண்கள் கிரிக்கெட் அளவிற்கு வரவேற்பு, ஆதரவு, உதவிகள் இல்லாத நிலையில் விளையாட்டின் மேல் கொண்ட விருப்பின் காரணமாக விளையாடி வரும் மகளிர் கிரிக்கெட் ஓரிரு வருடங்களில்லாவிட்டாலும், மிக அதிகமான வரவேற்பைப் பெறும் காலம் வெகுதொலைவில் இல்லை."

கோபிகிருஷ்ணா கனகலிங்கம் (Facebook Status)



**எமது வலைப்பதிவு**

circlelk.blogspot.com

சமூக விஞ்ஞான கற்கை வட்டம் தற்போது வலைப்பதிவொன்றின் ஊடாக உங்கள் அனைவரோடும் உரையாடத் தயாராகியுள்ளது.

இளைஞர்களின் நல்லாதரவினைப்பெற்ற வியாழக்கிழமைக் கலந்துரையாடல்கள், இலக்கியக்கூட்டங்களின் அடுத்த கட்டத்தினை அறிமுகப்படுத்திவரும் முழு நிலா நாட்களின் "பாடிப்பறை" நிகழ்ச்சி, Facebook குழுமம் ஆகியவற்றுக்கு அடுத்ததாக இன்னுமொரு அடியை எடுத்து வைக்கிறது எமது வட்டம்.

சமூகவிஞ்ஞானக் கற்கை வட்டத்தில் உரையாடப்படும் விடயங்கள் அங்கே வருகைதந்தவர்களுடன் மட்டுமே பகிரப்பட்டு மட்டுப்பட்டுவிடக் கூடாது என்பதற்காக வாரம் தோறும் செய்திமடல் ஒன்றும் வெளியிடப்படுகிறது. இச்செய்திமடல் ஒவ்வொரு வாரமும் கலந்துரையாடப்பட்ட விடயங்களின் பொழிப்பினைத் தாங்கி வெளிவருகிறது.

இதுவரை வெளியான அத்தனை செய்திமடல்களை இந்தத் தொடுப்பில் தரவிறக்கிப் படிக்கலாம்: circle.thulaa.net

செய்திமடல்கள் அச்சில் வெளிவருவதாலும் PDF வடிவில் இணையத்தில் சேமிக்கப்படுவதாலும் இணையத்தில் ஏதாவதொரு விடயத்தைத் தமிழில் தேடுபவர்களுக்கு அச் செய்திமடல்களின் உள்ளடக்கத்தினைத் தேடிப்பெற முடிவதில்லை. இது ஒரு பெருங்குறையாக எமக்கு இருந்துவந்தது.

இக்குறையினைத் தீர்க்குமுகமாக செய்திமடலின் முதன்மை உள்ளடக்கங்கள் இணையப் பாவனையாளர்களுக்கு வசதியாக வலைப்பதிவாகப் பிரசுரிக்கப்படவுள்ளன. அந்நோக்கத்துடன் உருவாக்கப்பட்டதே இவ்வலைப்பதிவு.

சமூக வலைத்தளங்களில் இங்கே பிரசுரிக்கப்படும் விடயங்களைப் பகிரவும் கலந்துரையாடவும், ஆழமான இணைய வழி உரையாடல்கள் அவ்விடயங்கள் மீது நடத்தவும் இவ்வலைப்பதிவு வழிதிறக்கிறது.

சமூக விஞ்ஞானக் கற்கை வட்டத்தின் வலைப்பதிவு முகவரி : circlelk.blogspot.com

சமூக விஞ்ஞான கற்கை வட்டத்தின் செய்தி மடல்களைப் படியெடுக்கவும் அச்சிட்டுப் பகிரவும் அனைவருக்கும் உரிமையுண்டு. இதில் வெளிவரும் ஆக்கங்களை மூலத்தைக் குறிப்பிட்டு எங்கும் பிரசுரிக்கலாம்.

cc BY NC SA